ஒட்டப்பிடாரம் பகுதி குடிதண்ணீர்த் திட்டம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருநெல்வேலி மாவட்டம் ஒட்டப்பிடாரம் பகுதி கிராமங்களுக்குக் குடி தண்ணீர்த் திட்டம் ஒப்பளிக்கப்பட்டுவிட்டதா ?

(இ) ஆமெனில் மத்திய சர்க்கார் மானியம் இந்த திட்டத்திற்கு அளிக்கப்படுமா ?

(உ) எப்பொழுது இதற்கான வேலே துவங்கும் ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) இல்லே.

(இ) and (உ) கேள்விகளுக்கு இடமில்லே.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலேவரவர்களே, சென்ற ஆண்டைக் காட்டிலும், நெல்லே ஜில்லா, கோவில்பட்டி தாலுக்கா, ஒட்டப்பிடாரம் பகுதியில் இந்த ஆண்டு தண்ணீர் கஷ்டம் மிக அதிகமாக இருக்கிறது. அதற்கு ஏதாவது திட்டங்கள் போட்டு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : கிராமப் பகுதிகளுக்கு குடி தண்ணீர் திட்டமானது அந்தந்த ஊர் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் சட்டப்பூர்வமான நடவடிக்கையிலே உட்பட்டதாகும். ஆகவே அவாகளுடைய நிதி நிலேயைக் கொண்டு இவற்றைப் பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அது பற்றிய செயற்குறிப்பு எதுவும் அரசாங்கத்திடமில்லே.

Bridge across Kottakudi river.

*220 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether representations have been received for the construction of a bridge across the Kottakudi River flowing through Koraikulam village of Thiruppullani in Ramanathapuram district ; and

(*b*) if so, the action taken thereon ?

கொட்டக்குடி ஆற்றுக்கு குறுக்கே பாலம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணியைச் சேர்ந்த கோரைக் குளம் என்னும் ஊருக்குக்குறுக்கே ஓடும் கொட்டக்குடி ஆற்றுக்குப் பாலம் கட்ட கேட்டு கோரிக்கைகள் வந்தனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லே.

(இ) கேள்விக்கு இடமில்லே.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலேவரவர்களே, இந்த ஊர்க்காரர்கள் மதுரையிலிருந்து சர்க்காருக்கு மனு எழுதிவிட்டு, காங்கிரஸ் ஆபீசில் வந்து என்னேயும் பார்த்துவிட்டுப் போஞர்கள். அந்த ஊருக்குப் போக்கு வரத்து அற்றுப் போய்விட்டது. சாதாரண வண்டிகள் கூட போக முடியவில்லே என்று சொல்லிவிட்டுப் போஞர்கள். இனிமேலாவது இதற்குத் தூத் தக்க நடவடிக்கை வேண்டும்? பஞ்சாயத்து யூனியனுக்கு எழுதி பாலம் கட்ட வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா ?

8th March 1968]

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : அரசாங்கத்திற்கு விண்ணப்பங்கள் எதுவும் வந்து சேரவில்லை. நான்கூட இரண்டு மூன்று முறைகள் மதுரைக்குப் போயிருந்தேன். யாரும் என்னிடம் வந்து விண்ணப்பம் தரவில்லை. ஆனால் இந்தப் பாலம் அமைக்கத் தோராயமாக ரூ. 6 லட்சம் செலவாகும். இதற்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்படவில்லை. சர்க்காரின் நிதி பற்றாக்குறையின் காரணமாக இத்தகைய பாலங்கள் கட்டுவது குறித்து உடனடியாக ஆலோசிக்கவேண்டிய நிலையில் அரசாங்கம் இல்லை.

Electoral Rolls

* 221 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Wiil the Hon. the Chief Minister be placed to state—

(*a*) wheth r new electoral rolls have been prepared for the South Mad as L k Sabha constituency and Sankari Assembly constituency of Salem district :

(*b*) if so, the member of voters in the old and new eiectotal rol's respectively; and

(*c*) whether there has been an increase in the number of voters and, if so, the reasons therefor ?

வாக்காளர் ஜாபிதா

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் சென்னை மக்கள் சபை தொகுதியிலும் சேலம் சங்கரி சட்டசபைத் தொகுதியிலும் வாக்காளர் ஜாபிதா புதியதாகத் தயாரிக்கப் பட்டதா ?

(இ) ஆமெனில் பழைய ஜாபிதாவிலும், புதிய ஜாபிதாவிலும் உள்ள வாக்காளர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(உ) வாக்காளர்கள் எண்ணிக்கை அதிகப்பட்டிருந்தால், அதற்கான காரணமென்ன?

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை :

(அ) தென் சென்னை மக்கள் சபைத் தொகுதியிலுள்ள ஆறு சட்ட சபைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் புதிதாகத் தயாரிக்கப் பட்டது. சங்கரி சட்டசபைத் தொகுதியின் வாக்காளர் பட்டியல் சுருக்க வகையில் அதாவது 1966-ம் ஆண்டு வாக்காளர் பட்டியலுக்குத் திருத்தம் செய்யப்பட்டது.

(இ) தென் சென்னை மக்கள் சபைத் தொகுதியில் அடங்கிய ஆறு சட்டசபைத் தொகுதிகளின் பழைய வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களின் எண்ணிக்கை 5,75,015. மேற்படி தொகுதிகளின் புதிய பட்டியல்களில் வாக்காளர் எண்ணிக்கை 5,83,718. அதிகமான வாக்காளர் எண்ணிக்கை 8,703.

சங்கரி சட்டசபைத் தொகுதியின் பழைய வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களின் எண்ணிக்கை 94,558. சுருக்க வகையில் திருத்தப்பட்ட 1967-ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் வாக்காளர் எண்ணிக்கை 94,177. வாக்காளர் எண்ணிக்கையில் குறைவு 381.

(உ) தென் சென்னை மக்கள் சபையில் அடங்கிய ஆறு சட்டசபைத் தொகுதிகளின் பழைய வாக்காளர் பட்டியலில் 1-1-1966-ம் ஆண்டு 21 வயது நிரம்பியவர்கள் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டனர். புதிய வாக்காளர் பட்டியலில் 1-1-1967-ம் ஆண்டு 21 வயது நிரம்பியவர்கள்